1973 டிசம்பர் 3]

செல்ல ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மழைக் காலங்களில் மணிமுத்தா, முசுகுந்தா, மயூரா நதிகளைக் கடந்து செல்ல முடியாத அவல நிலை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு மறுபரிசிலனை செய்து மேம்பாலம் கட்டித் தராவிட்டாலும் தரைப் பாலமாவது கட்டித்தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மயூரா நதியின் மீதும் மணிமுத்தா நதியின் மீதும் பாலம் கட்டவும், சாலை மேம்பாட்டுக்காகவும் 13 லட்சம் ரூபாய் செலவாகும் என்று அறிவித்துள்ளார்கள். மணிமுத்தா நதியில் பாலம் கட்ட 6 லட்சம் ரூபாய்; மயூரா நதியில் பாலம் கட்ட 5 லட்சம் ரூபாய், சாலை மேம்பாட்டுக்கு 2 லட்சம் ரூபாய் ஆக 13 லட்சம் செலவாகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அது பிற சாலைகள் திட்டத்தில் சேர்க்கப்படலாம் என்பது பரிசிலிக்கப்பட்டு வருகிறது. முசுகுந்தா நதியில் பாலம் கட்ட 30,000 ரூபாய் செலவாகுமென்று 'ரப் எஸ்டிமேட்' தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இதர சாலைகள் என்ற தலைப்பில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

தாம்பிரவருணி பாலத்தில் போக்குவாத்து.

*** 591 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவியில் தாம்பிரவருணி ஆற்றின் குறுக்கே புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியாகப் போக்குவரத்து நடைபெறுவது ஜூன் 1972 முதல் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

(உ) அந்தப் பாலம் எப்போது கட்டப்பட்டது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம். 16—6—1972 முதல் 20—6—1972 முடிய ஐந்து நாட்கள் மட்டும் தற்காலிகமாக தடைப்பட்டது.

(இ) சில மாதங்களுக்கு முன் எதிர்பாராத பலத்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினுல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சேரன்மகாதேவி பக்கம் கட்டப்பட்டுள்ள தாம்போதி

யின் கரை ஓரத்தை இணைக்கும் சுவர்களுக்கு இடையில் நிரப்பப் பட்ட மணல் தண்ணீரின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந் தது. எனவே தாம்போதியின் மேல்தளத்தில் போடப்பட்ட கான்கிரிட் உடைந்து விட்டது. இதனால் போக்குவரத்து தடைப் பட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்து 21—6—1972 முதல் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

(உ) 1965-ம் வருடம் இந்த வேலை கட்டிமுடிக்கப்பட்டது.

திரு. க. உரொ. எட்மண்ட்: இப்பேர்ப்பட்ட சூழ்நிலைகள் இனிமேல் உருவாகாமல் இருக்கும் வகையில் இருபக்கமும் கரை களைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எதிர்பாராமல் ஏற்பட்டது என்று சொன்னேன். எதிர்பாராமல் ஏற்படுவதற்கு இப்போதும் உறுதியளிக்க முடியாது.

Dhobykhana at Saidapet.

* 592 *Q*.—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Dhobykhana constructed with Government loan and grant at Saidapet is lying in a dilapidated condition; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: I am very sorry this reply is given. There is a Dhobykhana in Saidapet which is in a dilapidated condition. I do not know how the Hon. Minister got this answer from the Department. It is lying idle for the last ten years. I only request, through you, Sir, the Hon. Minister may go and inspect the place. I am prepared to go with him.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் சலவை செய்யும் இடமானது அரசு கடன் உதவியோ, மானியமோ பெற்றுக் கட்டப்பட்டது அல்ல. அது பூராவும் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்டது. 1959-60-ம்